மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அ.வ.எண்.22/2023

பெயர் – தங்கமாரியப்பன்(பி.வா.சா.4)

நாள் – 11.09.2024

வாதி தரப்பில் செய்யப்பட்ட கு.வி.

சங்கரபாண்டியபுரம் கிராமத்தில் நான் எத்தனை ஆண்டு காலமாக வேலை பார்க்கிறேன் என்றால் இரண்டு ஆண்டு காலமாக வேலை பார்க்கிறேன். சர்வே எண்.578/3B2 ஆனது அ பதிவேட்டில் என்னவாக பதிவாகியுள்ளது என்றால் ஆதிதிராவிடர் குடியிருப்பு என்று காட்டப்பட்டுள்ளது. அந்த சர்வே எண்ணில் ஆதிதிராவிடர் அருந்ததியர் சமுதாயத்தினர் குடியிருந்து வருகிறார்கள். சாட்சி தரப்பு சான்றாவணம்.2 ல் ஆவணத்தில் ஆதிதிராவிடர் அருந்ததியர் சமுதாயத்தை சேர்ந்த யாரொல்லாம் குடியிருந்து வருகிறார்கள் என்று பெயர் குறிப்பிட்டு கூறப்படவில்லை என்றால் சரிதான். சர்வே எண்.578/3B2 ஆதிதிராவிடர் நலத்துறையினரால் அருந்ததியர் சமுதாயத்திற்கு ஒதுக்கப்பட்டதாக யாதொரு குறிப்பும் இல்லை என்றால் சரிதான். நான் சாட்சியம் அளிப்பது என் கைவசம் உள்ள ஆவணங்களின் அடிப்படையில் என்றால் சரிதான். நான் சர்வே எண். 578/3B2 சென்று ஸ்தல விசாரணை செய்தேனா என்றால் சம்மந்தப்பட்ட வீட்டை போய் பார்த்தேன். நான் ஸ்தல விசாரணை செய்தேனா என்றால் இல்லை. சர்வே எண்.578/3B2 ஆனது 11 உட்பிரிவுகளாக எந்த ஆவணங்களின் அடிப்படையில் செய்யப்பட்டது என்று நான் கொண்டுவந்துள்ள ஆவணங்களில் உள்ளதா என்றால் உள்ளது. நத்தம் யூ.டி.ஆரில் உள்ளது. உட்பிரிவு செய்த போது ஸ்தலத்தில் யார் யார் குடியிருந்தார்கள் என்று நான் சொல்ல முடியாது என்றால் சரிதான். அது 1990ம் ஆண்டு உட்பிரிவு செய்யப்பட்டிருந்தது. உட்பிரிவு செய்யும் போது முறையாக விசாரணை செய்யாமல் அனுபவத்தில் இருந்தவர்கள் குறித்து முறையாக விசாரிக்காமல் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சி தரப்பு சான்றாவணம்.1 ஆவணம் வாதியை கட்டுபடுத்தகூடியது அல்ல என்றாலும், அது சாட்சிய அந்தஸ்து அற்றது என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை